18th July 1964]

Bikaneer sheep

* 530 *Q*.—Sri K. A. MATHIALAGAN and Sri RAMA-ARANGANNAL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether 326 Bikaneer sheep were purchased at a total cost of Rs. 32,818 for the Research Station at Chinnasalem from Rajasthan;

(*b*) whether it is a fact that most of them have since died; and

(*c*) if so, how many have died up to September 1963?

The Hon. Sri P. KAKKAN : (*a*) *to* (*c*) Three hundred and twenty-six sheep were purchased in July 1959, from Rajasthan at a total cost of Rs. 32,818 out of which 80 sheep were allotted to the Sheep Breeding Research Station, Chinnasalem. The remaining 246 sheep were also kept at the Research Station, Chinnasalem for rearing and acclamatisation before distribution to the other Sheep and Wool Extension Centres in this State as the Liason officer (Sheep and Wool), Indian Council of Agricultural Research requested to rear the Rajasthan sheep in the farm atleast for one year before distribution in the villages. During that period, 112 rams died and the remaining 134 rams were distributed to the following six centres :

1. Ammayagaram I.
2. Ammayagaram II.
3. Thondapadi I.
4. Thondapadi II.
5. Murugur.
6. Veeraganur.

Subsequently, 163 more sheep died up to September 1963 at the various centres thus totalling the number of deaths to 275.

திரு. சா. கணேசன் : இது செம்மரி ஆடா அல்லது வெள்ளாடா? இங்கு 'ஷீப்' என்று இருக்கிறது, அங்கு 'ராம்' என்று அமைச்சர் கூறினார்கள். ஒரு ஆடு 1,000 ரூபாய் விலை அளவுக்கு வருகிறது. இவ்வளவு விலையில் சிறப்பான ஆடு என்ன காரணத்திற்காக வாங்கப்பட்டது? இவ்வளவு வாங்கியதில் 51 ஆடுகளைத் தவிர பாக்கியெல்லாம் செத்துப்போய்விட்டன என்ற செய்தி வந்தது. இவ்வளவு விலை எதற்காக? எதன் காரணமாகச் செத்தன? கவனக் குறைவினால் செத்தனவா? அல்லது சீதோஷ்ண நிலை காரணத்தினால் செத்தனவா? சீதோஷ்ண ஸ்திதியால் செத்தன என்றால் இந்த சீதோஷ்ணத்திற்கும் தகும் என்ற 9-30 a.m.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[18th July 1964

கருத்தை அல்லது இந்த சீதோஷ்ணத்திற்கும் தகாது என்ற கருத்தை அந்தத் துறை அதிகாரிகள் யோசனை சொன்னார்களா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி மாதிரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் கூட்டி வைத்து, இதற்குக் காரணம் என்ன, ஏன் இத்தனை ஆடுகள் இறந்தன, கவனக் குறைவினால் இறந்தனவா? அல்லது சீதோஷ்ண ஸ்திதி காரணத்தினால் இறந்தனவா என்று நான் விசாரித்தேன். அந்த இடத்திலிருந்து இங்கு வரும்போது சீதோஷ்ண ஸ்திதி மாறுவதால் இந்த ஆடுகள் இறந்து விட்டன என்று சொன்னார்கள். கவனக் குறைவு என்று சொல்ல முடியாது என்று முன்பு இருந்த கால் நடை இலாகா டைரக்டர் சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் நன்கு கவனித்திருக்கவேண்டும் என்ற முறையில் சென்ஷுர் செய்கிற மாதிரி ப்ளாக் மார்க் அந்த அதிகாரிக்குக் கொடுக்கவேண்டுமென்று நானே ஏற்பாடு செய்திருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, சீதோஷ்ண நிலையால் இறப்பதாக இருந்தால் ஒரே நேரத்தில் எல்லா ஆடுகளும் இறந்திருக்கவேண்டும். இறந்ததெல்லாம் படிப்படியாக இறந்திருக்கின்றன. அனுப்பும்போதும் இறந்திருக்கின்றன. இதைப் பற்றி அந்த வட்டாரத்தில் குறிப்பிடும்போது கொடுத்த மருந்து வகைகள் சிலவற்றால் இப்படிப்பட்ட விபரீதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. இந்தப் புகார் அமைச்சருக்கு வந்ததா?

கனம் திரு. பூ. கக்கன்: அப்படி ஒன்றும் தகவல் இல்லை. சீதோஷ்ண ஸ்திதி காரணமாகத்தான் இறந்திருக்கின்றன. இங்கே நமக்கே தெரியும் கோழிகள் ஆடுகள் எல்லாம் திடீரென்று இறந்து போகும். சாகாமல் இருக்கத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கவனக் குறைவாக இருந்ததாகச் சொல்ல முடியாது என்று சொல்லுகிறார்கள். இந்த சீதோஷ்ண மாற்றம் காரணமாக ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: சீதோஷ்ண நிலையால் இந்த ஆடுகள் செத்ததாகச் சொல்லப்படுகிறது. மீதி ஆடுகளையாவது விற்று பணமாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது அந்த இடத்தைவிட்டு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா?

கனம் திரு. திரு. பூ. கக்கன்: பல கிராமங்களில் ஆடுகளைக் கொடுத்திருப்பதில் பல ஆடுகள் தப்பித்து இருக்கின்றன. அவைகள் நன்றாகவே இருக்கின்றன. மேலும் இதை அபிவிருத்தி செய்யலாம் என்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ராஜஸ்தான் வர்க்கம் நல்ல வர்க்கம். ஏற்கனவே இறந்து விட்டிருந்தாலும் மேலும் பரிசீலனை பண்ணிப் பார்க்கவேண்டும், லாபகரமாக வருவதை மறுபடியும் முயற்சி செய்து பார்க்கவேண்டும் என்று அதிகாரிகளும் சொல்கிறார்கள். ஜாஸ்தியாக வைக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக வைத்து எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் வைக்கலாம் என்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

18th July 1964]

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யாருடைய சிபாரிசின் அடிப்படையில் இவ்வளவு அதிக விலை கொடுத்து ஆடுகள் வாங்கப்பட்டன என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : டைரக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்ட்ரி சிபாரிசு செய்து ராஜஸ்தானுக்கு அதிகாரி போய் அங்கிருந்து வாங்கப்பட்டன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்த வர்க்க ஆட்டை நம்முடைய ராஜ்யத்திற்கு வாங்கி எடுத்து வருவதற்கு முன்னதாகவே நாம் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றதா என்று பரிசீலனை செய்திருக்க வேண்டும். இப்போது அமைச்சர் கொடுக்கும் பதிலைப் பார்த்தால் வேறு இடங்களில் ஏற்ற சீதோஷ்ண நிலை இருக்கும் என்று தெரிகிறது. அப்படி இருக்கும்போது இவ்வளவு ஆடுகள் சாகும் வரையில் பார்த்திராமல் உயர்தர அதிகாரியைக் கொண்டு போஸ்ட் மார்ட்டெம் எக்ஸாமினேஷன் செய்து அப்போதே அவைகளைப் பாதுகாக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

கனம் திரு. பூ. கக்கன் : எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைக்கவில்லை. பல இடங்களில் தான் வைத்திருக்கிறார்கள். அந்த இடங்களிலும் செத்திருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாக்குச் செடிப் பண்ணைகள்

* 531 **கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் சேலம் மாவட்டத்தில் எங்கெங்கு பாக்குச் செடிப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : சேலம் மாவட்டத்தில் பாக்குச் செடிப் பண்ணைகள் ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

At present there is no proposal to open Arecanut Nurseries in Salem district.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது பாக்கு நமது மாகாணத்தில் வெளியிலிருந்து இறக்குமதி குறைவாக இருப்பதால் ஸ்மக்ளிங் மூலமாக வெளியிலிருந்து வருகிறது. நம் மாகாணத்தில் அநேக ஜில்லாக்களில் பாக்கு விளைந்து வருமானம் வரக் கூடியதாக இருப்பதால், இதையும் தென்னையைப் போன்று அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஆறு இடங்களில் அரிக்காநட் நர்சரி ஏற்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறது.